4008

Register Number | | | | | |

# தமிழ் - இரண்டாம் தாள்

# Language – Part A – TAMIL – Paper II

நேரம் : 2 $\frac{1}{2}$ மணி ]

[ மொத்த மதிப்பெண்கள் : 100

*குறிப்பு* : i) கையெழுத்து தெளிவாக இருத்தல் வேண்டும்.

ii) விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும் இருத்தல் வேண்டும்.

iii) கட்டுரைகள் முன்னுரை, பொருளுரை மற்றும் முடிவுரைகளைக் கொண்டு இருத்தல் வேண்டும்.

I. எவையேனும் ஐந்தனுக்கு மட்டும் விடை தருக : $5 \times 1 = 5$

1. விஞ்ஞானிகள் சந்திராயன் விண்கலத்தை விண்ணில் செலுத்தினர்
   – செயப்பாட்டு வினை வாக்கியமாக மாற்றுக.
2. பொதிய மலை மிகவும் அழகாக உள்ளது.
   – உணர்ச்சி வாக்கியமாக மாற்றுக.
3. 'வாய்மை' என்றும் வெல்லும்.
   – வினா வாக்கியமாக மாற்றுக.
4. அறவாணன் திருவாசகம் கற்றான்.
   – பிறவினை வாக்கியமாக மாற்றுக.
5. வள்ளுவர் கோட்டத்தை அறியாதவர் எவருமிலர்.
   – உடன்பாட்டு வாக்கியமாக மாற்றுக.
6. கந்தன் கடுமையாக உழைத்தான். அதனால் பெரும் பொருள் ஈட்டினான்.
   – கலவை வாக்கியமாக மாற்று.
7. ஆசிரியர் மாணவர்களை நோக்கி, ''நான் நாளை தேர்வு நடத்துவேன்'' என்றார்.
   – அயற் கூற்றாக மாற்றுக.

[ Turn over

II. கீழ்க்காணும் வினாக்கள் அனைத்திற்கும் விடையளிக்கவும். 5 × 1 = 5

8. ஏதேனும் *ஒன்றனுக்கு* மட்டும் பொருள் விளங்க வாக்கியத்தில் அமைத்து எழுதுக :

அ) பசுமரத்தாணி போல்

ஆ) வாழையடி வாழையாய்

இ) அடியற்ற மரம் போல.

9. வழூஉச் சொற்களைத் திருத்தி எழுதுக :

செழியன் தாவாரத்தில் படுத்து உறங்கினான்.

10. மரபுப்பிழை நீக்கி எழுதுக :

மான் குருளை மிகவும் அழகாக உள்ளது.

11. பிறமொழிச் சொற்களை நீக்கி ஏற்ற தமிழ்ச் சொற்களை எழுதுக :

பஸ்ஸில் கோவிலுக்குச் சென்று பிரார்த்தனை செய்வோம்.

12. ஏற்ற இடங்களில் நிறுத்தற் குறிகளை இட்டு எழுதுக :

தமிழ் இளைஞர்களே பெறற்கரிய இன்ப நாட்டில் பிறக்கும் பேறு பெற்றிருக்கிறீர்கள் தமிழ் இன்பத்தினும் சிறந்த இன்பம் இவ்வுலகிலுண்டோ

III. கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை எழுதுக : 3 × 2 = 6

13. பகுபத உறுப்பிலக்கணம் தருக : ( ஒன்றனுக்கு மட்டும் )

அ) விளைத்த ஆ) கண்டனன்.

14. பிரித்து எழுதுக :

அ) வேங்கடமாமலை ஆ) கீழ்த்திசை.

15. இன்றியமையாத இலக்கணக் குறிப்பு தருக : ( இரண்டனுக்கு மட்டும் )

அ) மதிமுகம்

ஆ) தடக்கை

இ) ஈட்டுபுகழ்.

IV. கீழ்க்காணும் வினாக்களுக்குரிய சரியான விடையைத் தெரிந்து எழுதுக : 20 × 1 = 20

16. கைக்கிளை என்பது

அ) பொருந்தா அன்பு ஆ) ஒருதலை அன்பு

இ) பொருத்தமான அன்பு ஈ) இருவருக்கிடையே ஏற்படும் அன்பு.

17. தனிமொழிக்கு எடுத்துக்காட்டு .................... .

அ) எட்டு ஆ) வேங்கை

இ) நிலங்கடந்தான் ஈ) மனிதன்.

18. ஓசை குறையாத போதும் குறில் நெடிலாய் மாறி அளபெடுப்பது .................... .

அ) இசைநிறை அளபெடை ஆ) இன்னிசை அளபெடை

இ) சொல்லிசை அளபெடை ஈ) ஒற்றளபெடை.

19. தெரிநிலை வினைமுற்றிற்கு எடுத்துக்காட்டு .................... .

அ) நடந்தான் ஆ) நடந்து

இ) நடந்த ஈ) நடவா.

20. தெரிநிலை வினையெச்சத்திற்கு எடுத்துக்காட்டு .................... .

அ) நல்ல மாணவன் ஆ) படித்த மாணவன்

இ) படித்துத் தேறினான் ஈ) மெல்ல நடந்தான்.

21. செய்து என்னும் வினையெச்ச வாய்பாடு .................... காட்டும்.

அ) எதிர்காலம்

ஆ) இறந்தகாலம்

இ) நிகழ்காலம்.

22. வழுவமைதி என்பது .................... எனப் பிரியும்.

அ) வழு + அமைதி ஆ) வழுவு + அமைதி

இ) வழுவு + மைதி ஈ) வழு + வமைதி.

23. கத்துங்குயிலோசை என்பது .................... எடுத்துக் காட்டாகும்.

அ) இடவழுவமைதிக்கு ஆ) மரபு வழுவமைதிக்கு

இ) கால வழுவமைதிக்கு ஈ) திணை வழுவமைதிக்கு.

24. பொருட் சிறப்புக்காக ஒரு பொருளைக் குறிக்கப் பல சொற்கள் வருவது ................ .

அ) அடுக்குத் தொடர்

ஆ) ஒரு பொருட் பன்மொழி

இ) இரட்டைக் கிளவி.

25. மணிமேகலையை இயற்றியவர் யார் ? என ஆசிரியர் மாணவனிடம் வினவுவது ..................... .

அ) அறியா வினா ஆ) அறிவினா

இ) ஐயவினா ஈ) ஏவல்வினா.

26. 'கோப்பெருந்தேவி வந்தது' என்பது ..................... .

அ) பால் வழு ஆ) இட வழு

இ) திணை வழு ஈ) கால வழு.

27. பள்ளிக்கு வருவாயா ? என்று வினவிய வழி 'வருவேன்' என்பது ..................... .

அ) மறைவிடை ஆ) நேர்விடை

இ) சுட்டுவிடை ஈ) ஏவல்விடை.

28. நிலை மொழியும், வருமொழியும் எவ்வித மாற்றமும் இன்றிப் புணர்வது ..................... ஆகும்.

29. மேல்நாடு என்பது ..................... எனப் பிரியும்.

அ) மேல் + நாடு ஆ) மேற்கு + நாடு

இ) மேன்மை + நாடு ஈ) மேலை + நாடு.

30. நிலமாகிய முதற்பொருள் ..................... வகைப்படும்.

31. நாரை, நீர்க்கோழி, அன்னம் ..................... திணைக்குரிய கருப்பொருளாகும்.

32. பொருத்துக :

அ) கார் காலம் — சித்திரை, வைகாசி

ஆ) இளவேனில் — மார்கழி, தை

— ஆவணி, புரட்டாசி.

33. பொருத்துக :

அ) வெண்பா — அகவலோசை

ஆ) ஆசிரியப்பா — துள்ளலோசை

— செப்பலோசை.

34. கனி முன் நிரை வரின் ..................... ஆகும்.

அ) ஒன்றிய வஞ்சித்தளை

ஆ) கலித்தளை

இ) ஒன்றாத வஞ்சித்தளை.

35. ஆசிரியப்பாவின் ஈற்றடியின் ஈற்றுச் சீர் ..................... முடிவது சிறப்புடைத்து.

V. அ) கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் ***ஆறனுக்கு*** மட்டும் விடையளி : 6 × 2 = 12

36. தமிழ் இலக்கணம் எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?

37. சார்பெழுத்து எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?

38. பொது மொழி - விளக்குக.

39. தெரி நிலை வினைமுற்றைச் சான்றுடன் விவரி.

40. இறந்த கால வினையெச்ச வாய்ப்பாடுகள் யாவை ?

41. வினா எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?

42. வழுவமைதி என்றால் என்ன ?

43. இரட்டைக்கிளவியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

ஆ) பின்வரும் வினாக்களுள் எவையேனும் ***ஆறனுக்கு*** மட்டும் விடையளி : 6 × 2 = 12

44. வடகிழக்கு - பிரித்துப் புணர்ச்சி விதி தருக.

45. அன்பின் ஐந்திணைகள் யாவை ?

46. பெரும் பொழுதுகளை எழுதுக.

47. வெண்பாவின் பொது இலக்கணம் யாது ?

48. பரியது கூர்ங்கோட்ட தாயினும் யானை

வெரூஉம் புலிதாக் குறின் - இக்குறளில் பயின்று வரும் அணியைச் சுட்டுக.

49. தற்குறிப்பேற்ற அணியை விளக்குக.

*அல்லது*

சொற்பொருள் பின்வரு நிலையணியை விளக்குக.

[ Turn over

50. கீழ்க்காணும் குறட்பாவை அலகிட்டு வாய்பாடு கூறுக.

சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும்

ஏமப் புணையைச் சுடும்.

VI. 51. கீழ்க்காணும் பாடலைப் படித்துப் பொருளுணர்ந்து பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக : 5 × 2 = 10

நீதிநெறி வழுவாமல் நிற்கவேண்டும்

நெஞ்சார உண்மைதனைப் பேசவேண்டும்

ஓதிமறை உயர்ந்தவரை மதிக்க வேண்டும்

ஒப்பற்ற ஆசான் சொல் கேட்க வேண்டும்

ஆதியிலே வாழ்ந்தமுறை நினைக்க வேண்டும்

ஆபத்தில் உற்றவர்க்கு உதவ வேண்டும்

சோதிவடி வானவனைச் சொல்ல வேண்டும்

சுகம் பெறவே வாயார வாழ்த்த வேண்டும்.

*வினாக்கள் :*

அ) எந்நெறியில் நிற்க வேண்டும் ?

ஆ) உண்மையை எங்ஙனம் பேச வேண்டும் ?

இ) யாரை மதிக்க வேண்டும் ?

ஈ) யாருடைய சொல்லைக் கேட்க வேண்டும் ?

உ) இப்பாடலில் அமைந்துள்ள இரு எதுகைச் சொற்களை எடுத்து எழுதுக.

VII. 52. நீ கண்டு களித்த அறிவியல் கண்காட்சி குறித்து நண்பனுக்கு ஒரு கடிதம் எழுது.

$1 \times 10 = 10$

*அல்லது*

உமது ஊரில் நூலகம் அமைத்திட வேண்டி நூலக ஆணையருக்கு விண்ணப்பம் ஒன்று வரைக.

VIII. 53. கீழ்க்காணும் தலைப்புகளுள் **ஒன்று** குறித்து ஒன்றரைப் பக்கத்திற்கு மிகாமல் கட்டுரை வரைக :

$1 \times 10 = 10$

அ) சுற்றுப்புறச் சூழலில் மாணவர் பங்கு

ஆ) காலத்தை வெல்லும் கணினி

இ) அனைவருக்கும் கல்வி.

IX. 54. கீழ்க்காணும் தலைப்புகளுள் **ஒன்றனுக்கு** மட்டும் ஒன்றரைப் பக்கத்திற்கு மிகாமல் கட்டுரை வரைக :

$1 \times 10 = 10$

அ) நாகராசனின் பண்பு நலன்களை 'சொந்த வீடு' என்ற கதையைக் கொண்டு ஆய்க.

ஆ) அப்பாவு கணக்கில் 35 ரூபாய்.

இ) 'பெத்த மனம் பித்து, பிள்ளை மனம் கல்லு' என்ற பழமொழியைக் 'காய்ச்ச மரம்' என்னும் கதை கொண்டு விளக்குக.

ஈ) குருவிப்பட்டி பாலமும் பொன்னம்பலமும் என்ற பகுதி அமைந்த புதிய பாலக் கதையை விளக்கு.